## தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு

---

தலைப்பு 230 – சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 31 ஆம் திகதி சட்ட வரைஞருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

சட்ட வரைஞர் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 117.86 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 92.76 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 25.10 மில்லியன் அதாவது 21.30 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 86.56 | 76.90 | 9.66 | 11.16 |
| மூலதனம் | 31.30 | 15.86 | 15.44 | 49.33 |
| மொத்தம் | 117.86 | 92.76 | 25.10 | 21.30 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 4.00 | 3.87 | 1.50 | 3.02 | 17.00 | 10.65 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0138/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கு மீதி ரூபா 0.027 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ்வரும் 6000/0000/00/0013/0067/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கு மீதி ரூபா 1.41 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

சட்ட வரைஞர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத்

தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளை போன்றவற்றுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

### 3.2 ஏனைய அமைச்சுக்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு

திணைக்களத்தின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 30,000,000 தொகையான நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்காக 05 பிரதான செயற்பாடுகளின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்பாடுகளுக்கிடையே கணனிமயப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 5,000,000 தொகையிலிருந்து 69 சதவீதம் அதாவது ரூபா 3,465,530 தொகையும், கணனிகள் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,000,000 தொகையிலிருந்து 51 சதவீதம் அதாவது ரூபா 1,354,490 தொகையும் மற்றும் சட்ட நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,000,000 தொகையிலிருந்து 38 சதவீதம் அதாவது ரூபா 776,375 தொகையும் ஆக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமையால் பாதீட்டு முன்மொழிவுகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2015 மற்றும் 2016 ஆம் அண்டுகளின் போது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) கீழ் நீதி அமைச்சினால் சட்ட விஞ்ஞாபன வரைவு உத்தியோகத்தர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) கீழ் நீதி அமைச்சினால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 1,405,975 தொகை உரிய பணிகளுக்காக செலவிடப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

#### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

2014 பெப்ரவரி 28 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் சட்ட விஞ்ஞாபன திருத்த செயற்திட்டத்திற்காக 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 109,175,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டுகளின் போது கூட்டுமொத்தமாக ரூபா 4,702,021 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டில் 4.31 சதவீதமாக இருந்தது. மேலும் மீள்திருத்தம் செய்யவேண்டியிருந்த சட்ட விஞ்ஞாபனம் A முதல் Z வரையான தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதில் A முதல் T வரையான தொகுதிகளின் சட்ட விஞ்ஞாபனம்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள்திருத்தம் செய்யப்பட்டு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 30 | 07 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 28 | 16 | 12 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 54 | 43 | 11 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 22 | 02 | - |
| (v) | ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | - | 04 | - | 04 |
| | மொத்தம் | 143 | 115 | 32 | 04 |